# இனச் சுத்தீகரிப்பிற்கு உள்ளாகி வருகின்ற ரோஹிங்கியர்கள் - ஒரு வரலாற்று நோக்கு

சஞ்சிகா புவனதாஸ்[(1)], பேராசிரியர் க.அருந்தவராஜா[(2)], மங்களரூபி சிவகுமார்[(3)]

[1] வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

[2] இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

[3] வரலாற்றுத் துறை, பிளிண்டேர்ஸ் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியா

Sanchi2118@gmail.com, arunn.msu@gmail.com, mangalarubysivakumar@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

அண்மைக்காலங்களாக ஆசிய நாடுகளில் சிறுபான்மையினராக வாழ்கின்ற முஸ்லீம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனவாதத்தின் பின்னணியில் உருவான அடக்கமுறைகளின் உச்ச வெளிப்பாடுகளிலொன்றுதான் மியன்மாரில் ரோஹிங்ய முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனச்சுத்தீகரிப்பு என்ற நிகழ்வாகும். பௌத்த பேரினவாத நாடுகளில் மியன்மாரும் ஒன்று. அங்கு சிறுபான்மையினராக ரோஹிங்ய முஸ்லீம்கள் வாழ்கின்றனர். கடந்த பல வருடங்களாகவே ரோஹிங்யர்கள் அங்கே வதைக்கப்படுகின்றனர் என்ற குரல்கள் சர்வதேசமெங்கும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ரோஹிங்கியர்கள் மியன்மாரின் வடக்குப் பகுதியான ராகைன் மாகாணத்தில் வாழ்கின்றனர். ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ரோஹிங்கிய முஸ்லீம்கள் தமது வரலாற்றினை அடையாளப்படுத்தும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கினர். இதுவே ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கும் மியன்மார் அரசுக்கும் இடையிலான பிரிவினைக்கு தூபமிட்டிருந்தது. தொடர்ந்து ரோஹிங்கியர்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. ரோஹிங்கிய இனத்தவர்கள் பங்காளி இனத்தவர்கள் எனவும் அவர்கள் மியன்மார் இனத்தவர்கள் அல்லர் என்ற கருத்தும் 1956இல் இருந்து மியன்மாரில் பரவத் தொடங்கியது. இதன் விளைவாகவே மியன்மார் நாடு பூராகவும் முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன. இதனடிப்படையில் மியன்மார் அரசு ரோஹிங்கியர்கள் இடையில் வந்தவர்களெனவும் சட்டவிரோதக் குடிகளெனவும் குறிப்பிட்டு அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகள் எல்லாவற்றினையும் தடுத்து வருகின்றது. இதனால் ரோஹிங்யர்களின் விடுதலைக்காக ஆயுதக்குழு ஒன்றும் அங்கு செயற்படத் தொடங்கியது. இந்த ஆயுதக்குழு 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி நடத்திய தாக்குதலை அடுத்து 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதையடுத்து மியன்மார் அரசானது ரோஹிங்யர்களுக்கு எதிரான வன்முறையை பெருமெடுப்பில் மேற்கொண்டது. இதனையடுத்து ஏராளமான ரோஹிங்யர்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அயல்நாடுகள் நோக்கி நகர ஆரம்பித்தனர். இம்மக்களுக்களுக்கெதிராக மியன்மார் அரசு கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வு, கிராமங்களை அழித்தல், அரச மற்றும் தனியார் வேலைகளை வழங்காமை, காரணமின்றி சிறையிலடைத்தலென அனைத்து விதமான மனித உரிமை மீறல்களையும் நடைமுறைப்படுத்தியது. சர்வதேசம் இதனைப் பெரிதளவில் கண்டுகொள்ளவில்லை. ஐ.நா சபை தற்காலத்தில் இவ்விடயமாக கவனம் செலுத்தியபோதும் அதனால் ரோஹிங்கியர்களுக்கு ஒரு தீர்வினை முழுமையாகப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விமர்சன நோக்கில் அமையப்பெற்ற இவ்வாய்வின் மூலமாகப் பல நோக்கங்கள் நிறைவு செய்யப்படுகின்றன. ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கெதிராக மியன்மார் அரசு மேற்கொண்ட இனச்சுத்தீகரிப்பு நடவடிக்கைகளை இனங்காண்பதும், ரோஹிங்கிய முஸ்லீம்கள் தொடர்பாக சர்வதேச நாடுகளின் நிலைப்பாட்டினை வெளிக்கொணர்வதும், இறுதியாக அவர்களது தற்கால நிலை எது என்பதனை வெளிப்படுத்துவதனையும் பிரதான நோக்கங்களாக இவ்வாய்வானது கொண்டுள்ளது. இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர தரவுகள் ஆய்வின் தேவைகருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் தலைவர்களால் சமகாலத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள், முதற்தர ஆதாரங்களாகவும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் என்பன இரண்டாம்தர தரவுகளாகவும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொதுப்படப் பார்த்தால் மியன்மார் நாட்டில் பல்லின அரசொன்று அமையுமிடத்திலே தான் அங்கு ஜனநாயகத்தினை ஓரளவுக்கு எதிர்பார்க்க முடியும்.

**திறவுச் சொற்கள்** : மியன்மார், ரோஹிங்கிய முஸ்லீம்கள், பிரஜாவுரிமை, இனச்சுத்திகரிப்பு, மனித உரிமை மீறல்கள்

## அறிமுகம்

இன்று உலக நாடுகளின் கவனம் முழுவதையும் தங்கள் பக்கம் திருப்பியவர்களாக ரோஹிங்கிய முஸ்லீம்கள் திகழ்கின்றனர். ரோஹிங்யர்கள் துயரத்தின் கடைசி எல்லையில் சிக்கித் தவிக்கின்றனர் என்றால் மறுப்பதற்கில்லை. ஆரம்பகாலத்தில் பர்மா என அழைக்கப்பட்ட இந்நாடானது 1989இற்கு பின்னராகவே மியன்மாரென மாற்றங்கண்டது. தேரவாத பௌத்தத்தை பிரதான மதமாகக்கொண்ட மியன்மாரில் அதிகளவிலான விகாரைகள் காணப்படுவதனால் விகாரைபூமியெனவும் அது சிறப்பிக்கப்படுகின்றது. மியன்மார் நாட்டின் எல்லைகளாக பங்களாதேஷ், சீனா, லாவோஸ், தாய்லாந்து என்பன காணப்படுகின்றன.(ராமச்சந்திரன்,கே.வி.1960) மியன்மாரில் 135 தேசிய இனங்கள் வாழ்கின்றனர். அத்தனைபேருக்கும் மியன்மார் நாட்டின் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. மியன்மார் நாட்டில் பான்தாய்கள், பஷீஷ், ரோஹிங்கியா என மூன்று வகையான முஸ்லீம்கள் வாழ்கின்றனர். ரோஹிங்கிய முஸ்லீம்கள் மேற்கு மியன்மாரில் வாழ்கின்ற பத்து தொடக்கம் பதினைந்து லட்சம் மக்கள். இவர்களில் பெரும்பாலானோர் வடக்கில் பங்களாதேசம் மற்றும் மேற்கில் வங்களாவிரிகுடாவின் ராகைன் மாகாணத்திலும் வாழ்ந்து வருகின்ற ஒரு சிறுபான்மையின மக்கள் கூட்டம். ரோஹிங்கிய முஸ்லீம்கள் மியன்மாரில் மட்டுமன்றி பங்களாதேஷ், சவுதிஅரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மலேசியா, பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற பகுதிகளிலும் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விமர்சன நோக்கில் அமையப்பெற்ற இவ்வாய்வின் மூலமாகப் பல நோக்கங்கள் நிறைவு செய்யப்படுகின்றன. ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கெதிராக மியன்மார் அரசு மேற்கொண்ட இனச்சுத்தீகரிப்பு நடவடிக்கைகளை இனங்காண்பதும், ரோஹிங்கிய முஸ்லீம்கள் தொடர்பாக சர்வதேச நாடுகளின் அண்மைக்கால நிலைப்பாட்டினை வெளிக்கொணர்வதும், இறுதியாக அவர்களது தற்கால நிலை எது என்பதனை வெளிப்படுத்துவதனையும் பிரதான நோக்கங்களாக இவ்வாய்வானது கொண்டுள்ளது. இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர தரவுகள் ஆய்வின் தேவைகருதி பயன்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் தலைவர்களால் சமகாலத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்கள், முதற்தர ஆதாரங்களாகவும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், வினாக்கொத்துக்கள், அவதானிப்புக்கள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் என்பன இரண்டாம்தர தரவுகளாகவும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரதேசத்து முஸ்லிம்களது நடைமுறைப் பிரச்சினை தொடர்பாக சமகாலத்தில் எவ்விதமான நூல்களும் வெளிவரவில்லை. இதனால் முன்னைய ஆய்வுகளென்பது சமகாலப் பத்திரிகைகள், இணையம் என்பனவற்றினை நம்பியதாகவே உள்ளது. எனவே இனவாதமும் மதவாதமும் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு தேசத்தில் எப்போதும் கைவிடப்பட்டதொரு இனமாகவே சிறுபான்மையினம் இருக்குமென்பது வரலாறு கற்றுத் தருகின்ற பாடங்களிலொன்று.

**ஆரம்பம்**

ரோஹிங்கிய முஸ்லீம்களது தோற்றம் தொடர்பாக ஆய்வாளர்கள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒருசிலர் ரோஹிங்கிய முஸ்லீம்கள் ஆங்கிலேயர்களது ஆட்சிக் காலத்தில் வங்காளத்திலிருந்து வந்து குடியேறியவர்கள் எனவும், வேறு சிலர் 1948இல் நடைபெற்ற பர்மிய விடுதலையின் பின்னரும், 1971இல் நடைபெற்ற வங்காள விடுதலைப் போரின் பின்னராகவும் வந்து குடியேறியவர்கள் எனவும் குறிப்பிடுகின்றனர். (Trager,N.1966) அதாவது ரோஹிங்கியர்கள் தம்மை மியன்மாரின் பூர்வீகக் குடிகள் என்றும், மியன்மாரின் பெரும்பான்மை மிதவாதிகள் ரோஹிங்கியர்கள் வந்தேறு குடிகள் என்றும் இருவேறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளனர். இருப்பினும் 1950 வரையிலான எந்தவொரு பர்மிய ஆவணங்களிலும் ரோஹிங்கிய என்ற சொல் இடம்பெறவில்லை. பொதுவாக ரோஹிங்கிய இனத்தவர்கள் பங்காளி இனத்தவர்கள் எனவும் அவர்கள் மியன்மார் இனத்தவர்கள் அல்லர் என்ற கருத்தும் 1956இலிருந்து மியன்மாரில் பரவத் தொடங்கியது. இதன் விளைவாகவே மியன்மார் நாடு பூராகவும் முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன.

இதனடிப்படையில் மியன்மார் அரசு ரோஹிங்கியர்கள் இடையில் வந்தவர்களெனவும் சட்டவிரோதக் குடிகளெனவும் குறிப்பிட்டு அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகள் எல்லாவற்றினையும் தடுத்து வருகின்றது. குறிப்பாக சர்வதேசங்களது உதவிகளைக்கூட மியன்மார் அரசு அவர்களுக்கு வழங்குவதற்கு பின்னடிக்கின்றது.

**பிரித்தானியர் காலம்**

மியன்மார் நாடு பத்தொன்பதாம் நூற்றாண்டு பிரித்தானியர்களின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து பிரித்தானியர்கள் தமது காலனியாதிக்க நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு குறிப்பிட்ட நாட்டின் விவசாயம், பண்ணை மற்றும் தொழிற்சாலை வேலைகளுக்கென பிறபகுதி மக்களின் குடியிருப்புக்களை அப்பிரதேசத்தில் அமைத்துக்கொண்டனர் அல்லது ஊக்குவித்திருந்தனர். இதனால் பிரித்தானியரால் குடியேற்றப்பட்ட புதிய குடியேற்ற மக்களுக்கும், சுதேச மக்களுக்கும் எப்பொழுதும் பிரச்சனைகள் ஏற்பட்டு வந்தன. (Louis Allen.1934) இரண்டாம் உலகப் போரின் விளைவாக பிரித்தானிய அரசு தனது ஆதிக்கத்திலிருந்த நாடுகளை விட்டு வெளியேறியபோது அது நேரிடையாகவும் மறைமுகமாகவும் அந்நாட்டில் தேசிய மற்றும் தேசவிரோத பிரிவினைச் சக்திகளுக்கு உரமிட்டிருந்தது. இதன் பின்னணியிலேயே ரோஹிங்கிய முஸ்லீம்களின் தனிநாட்டு கோரிக்கையும் அமைந்துகொண்டது.

ஆரம்பகாலத்தில் ராகைன் பகுதியில் வாழ்ந்த ரோஹிங்கிய முஸ்லீம்களுடன் பௌத்த மக்களும் வாழ்ந்து வந்தனர். சமய அடிப்படையில் வேறுப்பட்டவர்களாக இவ்விரு இனத்தவர்களும் காணப்பட்டாலும்கூட நீண்டகாலமாக இப்பகுதியில் இவ்விரு இனத்தவர்களும் அமைதியுடன் வாழ்ந்தனர். இந்நிலையில் ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் ரோஹிங்கிய முஸ்லீம்கள் தமது வரலாற்றினை அடையாளப்படுத்தும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கினர். வரலாற்று ரீதியான இருப்பிடம், இன, மொழி அடையாளங்கள், பாரம்பரியங்கள், நாகரிகம் போன்ற தேசியப் பண்புகள் அவர்களிடமிருப்பது எடுத்துக்காட்டப்பட்டது. அத்தோடு நில மற்றும் எல்லை ரீதியான வளங்களுக்கும் அவர்கள் உரிமை கொண்டாடத் தொடங்கினர். இவற்றின் அடிப்படையில் மியன்மார் அரசிடம் ரோஹிங்கிய முஸ்லீம்கள் தம்மைச் சுயநிர்ணய உரிமையினைக் கொண்ட சமூகமாக ஏற்க வேண்டுமென்ற கோரிக்கையினை முன்வைத்தனர். இக்கனவு 1948ஆம் ஆண்டு மியன்மாரின் சுதந்திரத்திற்கு பின்னர் மேலும் வேகம் பெறத் தொடங்கியது.(அருந்தவராஜா.க.,2018) இதுவே இவ்விரு இனத்தவர்களுக்குமிடையே விரிசலை ஏற்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்துகொண்டது.

**ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையிலான முரண்பாடு**

பிரித்தானியாவின் காலனியான பர்மாவின் மீது ஜப்பான் இரண்டாம் உலகப் போரின் போது படையெடுத்தது. பொதுவாக 1941ஆம் ஆண்டிலிருந்து ரோஹிங்கிய முஸ்லீம்கள் பிரித்தானியர்களுக்கு சார்பாகவும், மியன்மாரின் சுதந்திரத்தை விரும்பிய பௌத்தர்கள் பிரித்தானியர்களுக்கு எதிரான போக்கையும் கொண்டவர்களாக விளங்கினர். இவ்வாறான மாறுபட்ட போக்கே இரு பிரிவினர்களுக்கும் இடையிலான பிரிவினைக்கு தூபமிட்டிருந்தது. இதனை மேலும் தீவிரமடையச் செய்யும் செயற்பாடாக ரோஹிங்யர்களின் அரக்கான் மீதான தாக்குதல் அமைந்துகொண்டது. ஜப்பான் மியன்மார் மீது படையெடுத்தபோது ஜப்பானை எதிர்த்துத் தாக்குவதற்குப் பதிலாக ரோஹிங்யர்கள் அரக்கான் மக்களை 1942இல் தாக்கினர். இத்தாக்குதலின்போது 5000 முஸ்லீம்களும், 20,000 அரக்கான் மக்களும் கொல்லப்பட்டனர்.(www.wordpress.com) ரோஹிங்கியரின் இந்நடவடிக்கையினால் அவர்கள்

மீது காழ்ப்புணர்ச்சி கொண்டதொரு பிரிவினராக பௌத்தர்கள் மாற்றங்கண்டனர். இதுவே பௌத்த – ரோஹிங்கிய முஸ்லீம்களின் உறவைப் பின்னாளில் வினாவுக்குரியதாக்கியது.

மியன்மார் காலனித்துவ ஆட்சியிலிருந்து 1948ஆம் ஆண்டு சுதந்தித்தைப் பெற்றது. தொடர்ந்து மியன்மாரில் இராணுவத்தை மையமாகக் கொண்ட இராணுவ ஆட்சி மையம் கொண்டது. இக்கட்டத்திலிருந்து ரோஹிங்கியர்கள் மீதான வன்முறைகள், அடக்குமுறைகள், இனத்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் வெகுவாக மியன்மார் அரசினால் மேற்கொள்ளப்படலானது. குறிப்பாக 1982ஆம் மியன்மாரின் குடியுரிமைச் சட்டம் ரோஹிங்கிய முஸ்லீம்களை தமது நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளவில்லை. மியன்மார் நாட்டில் நிகழ்ந்தேறுகின்ற ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் பௌத்தத் துறவிகள், தேசியவாதிகள், 969 என்ற மதத்தீவிரவாத அமைப்பினர் போன்றோரும் பிரதான பங்காளர்களாக தொழிற்படுகின்றனர்.

**சுதந்திரத்திற்கு பின்னராக ரோஹிங்கியர்களின் நிலை**

சட்டவிரோதக் குடிகள் என மியன்மார் அரசினால் முத்திரை குத்தப்பட்ட ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கெதிராக சுதந்திரத்திற்கு பின்னர் பாரியளவிலான மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டது. 1978 மற்றும் 1981 காலப்பகுதியில் மியன்மார் இராணுவத்தினரால் 4,50,000 முஸ்லீம்கள் அந்நாட்டை விட்டு விரட்டப்பட்டனர். (www.wordpress.com) 2013ஆம் ஆண்டு மியன்மார் நாட்டு காவல்துறையினர், இராணுவத்தினர் முன்னிலையிலேயே சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் எரிக்கப்பட்டனர். மியன்மாரில் இராணுவத்தின் கடும் நடவடிக்கைகளினால் ஒரே மாதத்தில் 6700 ரோஹிங்ய முஸ்லீம்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 5 வயதிற்கு உட்பட்ட 730 குழந்தைகள் உட்பட, 6700 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2016ஆம் ஆண்டு மியன்மார் நாடாளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ரோஹிங்கியர்களை இணைத்துக்கொள்வதனை அரசு தடுத்தது. அத்தோடு ரோஹிங்கியர்கள் தேர்தலில் வாக்களிப்பதைத் தடை செய்வதற்கான சட்டமும் இயற்றப்பட்டது. (www.samooganeethi.org)

2012ஆம் ஆண்டு பௌத்த மக்களுக்கும் ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கும் இடையிலே நடைபெற்ற கலகமானது பல்வேறு முக்கியத்துவத்தினை பெற்றுக்கொண்டது. குறிப்பாக இக்கலகத்தின் பின்னராகவே முஸ்லீம்களுக்கெதிராக மதகுருமார்களின் நடவடிக்கைகள் வேகம்பெறத் தொடங்கின. 2017ஆம் ஆண்டு நடைபெற்ற இனவெறித் தாக்குதல் அதனொரு தீவிரமான வடிவமே. 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முஸ்லீம் ஆயுததாரிகள் ரோஹிங்கிய பகுதியிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டுமெனகூறி மியன்மாரின் ராகைன் பகுதியிலுள்ள இராணுவ அரண்கள்மீது தாக்குதலை மேற்கொண்டனர். இராணுவத்தினரின் எதிர் நடவடிக்கையினால் சுமார் 6 இலட்சத்திற்கும் அதிகமான ரோஹிங்கியர்கள் வங்கதேசத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். அத்தோடு மாபாதா (இனத்தையும் மதத்தையும் பாதுகாப்பதற்கான அமைப்பு), தேசியவாதிகளின் இயக்கம் போன்ற அமைப்புக்களும் இத்தாக்குதல் நடவடிக்கைகளில் பங்காற்றியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். அத்தோடு 2017இல் ரோஹிங்கிய மக்கள் வெளியேறியிருந்த கிராமங்களுக்குள் புகுந்த இராணுவம் அவற்றினை அழித்ததுடன் வெளியேறிய மற்றும் வெளியேறிக்கொண்டிருந்த மக்களையும் தாக்கியுள்ளது. (அருந்தவராஜா,க.2018)

பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற போர்வையில் மியன்மார் அரசு மேற்கொள்ளும் மோசமான நடவடிக்கைகளினால் ரோஹிங்கிய முஸ்லீம்கள் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனரென்பது சர்வதேசங்களும் ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மை. அத்தோடு மியன்மார் அரசு

ரோஹிங்கியர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கான அனுமதியினை மறுத்துள்ளது. அதேபோன்று அரச மற்றும் தனியார் வேலைகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டன. இதன் மூலமாக மியன்மார் அரசு அவர்களது போக்குவரத்தினை ராகைன் மாகாணத்தின் எல்லைக்குள்ளேயே அடக்கியது. அவர்கள் தெருக்கள் போடுவதற்கான கற்களை உடைத்தல் போன்ற வேலைகளில் சம்பளமின்றி வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். அத்தோடு அவர்கள் பிற இடங்களுக்குச் செல்வதானால் தமது விலங்குகள், பொருட்களை இராணுவத்தினருக்கு இலஞ்சமாக வழங்க வேண்டியவர்களாகவும் காணப்பட்டனர்.

ஏ.பி செய்தி முகவராண்மை ரோஹிங்கிய முஸ்லீம்களின் பகுதியான ராகைனில் பாரிய ஐந்து மனிதக் குழிகள் காணப்படுவதாக ஒரு செய்தியை வெளியிட்டது. அத்தோடு பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களிடமிருந்து தாக்குதலின் பின்னர் எடுக்கப்பட்ட காணொளிகளும் இவ்வறிக்கையோடு இணைக்கட்டடிருந்தது. இம்மனிதக் குழியில் சுமார் 400பேர் புதைக்கப்பட்டிருக்கலாமெனவும் அது கூறுகின்றது. ஆனால் இதனை மறுத்த மியன்மார் அரசு அங்கு ஒரேயொரு மனிதப் புதைகுழிதான் இருப்பதாகவும் அதில் 10 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டதாகவும் கூறுகின்றது.(அருந்த வராஜா,க.2018)

இந்நிலையில் தமது உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் ரோஹிங்கிய மக்கள் கடல் மற்றும் நிலப்பரப்புக்கள் மூலமாகவும் அண்டை நாடுகளில் அடைக்கலம் தேடுகின்றனர். இவர்களில் அதிகளவிலான மக்கள் பங்களாதேஷிலேயே அகதிகளாக வாழ்கின்றனர். இவர்கள் தமது உயிரைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் பயணம்கூட அவர்களை ஏமாற்றிவிடுகின்றது. இதனை நாளுக்குநாள் பத்திரிகைகளில் வரும் ‘தஞ்சம் தேடிச் சென்ற பயணத்தில், 9 நாட்கள் ஆபத்தான கடலில் தத்தளித்த ரோஹிங்கிய அகதிகள்’, ‘ரோஹிங்கிய அகதிகள் மீது துப்பாக்கி சூடு’, ‘படகு விபத்து: 12 ரோஹி ங்கியா அகதிகள் பலி’ போன்ற தலைப்புக்களே புலப்படுத்திவிடுகின்றன. இந்நிலையில் அதிகரித்து வருகின்ற அகதி எண்ணிக்கையினால் பாதுகாப்பு வழங்கிய நாடுகளும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கத் தொடங்கியது. .(செந்தில்நாதன்,ஆழி.2013) அண்டை நாடுகளும், சர்வதேச நாடுகளும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட பிறகும்கூட அங்கே இனச் சுத்திகரிப்பை மியன்மார் இராணுவம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடச் செல்லவும், உதவி செய்வதற்குமான அமைப்புக்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகின்றது. ஆபத்து எனத் தெரிந்தும்கூட அம்மக்களை மீண்டும் மியன்மார் நோக்கி அனுப்புவதற்கான முயற்சிகள் சர்வதேசங்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**2015ஆம் ஆண்டு தேர்தல்**

மியன்மார் நாட்டில் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் மூலமாக இராணு ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டு பெயரளவிலான ஒரு ஜனநாயக அரசு 2015.11.08இல் உதயமானது. இதன்போது ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய கட்சி அதிகமான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டது. இதனைத் தொடர்ந்து மியன்மார் நாட்டின் புதிய ஜனாதிபதியாக ஹிதின் கியாவ் என்பவரும் அரச ஆலோசகராக ஆங் சான் சூகியும் பதவியேற்றுக் கொண்டனர். இக்கட்டத்திலிருந்து ரோஹிங்கியர்களுக்கு எதிரான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு ஒரு தீர்வு கிடைத்து விடுமென்றே சர்வதேசங்கள் கருதின. ஆங் சான் சூகியை அவ்வரசு அரச ஆலோசகராகக் கொண்டிருந்தது. மியன்மாரின் இராணுவ ஆட்சிக்கெதிராக குரல் கொடுத்த ஒரு வீரப் பெண்மணி சூகி அத்தோடு இராணுவத்திற்கெதிராக அமைதி வழிப் போராட்டத்தை மேற்கொண்டு நோபல் பரிசினை வென்றவர். இதனால் இராணுவ ஆட்சியின் போது

வீட்டுக் காவலில்கூட சூகி வைக்கப்பட்டார். ஆனால் இன்றோ ஆன் சான் சூகி மியன்மார் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளை குறைகூறுவதற்கு பின்னடிக்கின்றார்.

மியன்மார் நாட்டில் ஜனநாயகம் மலர்ந்துள்ளது என்றாலும் அது இராணுவத்தின் உள்ளங்கையில் தான் மலர்ந்துள்ளது. ஏனெனில் ஆங் கான் சூகிகூட ராகைனில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு கவலை தெரிந்திருந்தாலும் அதற்கான குற்றத்தை உடனடியாக இராணுவம் மீது சுமத்தவில்லை. உதாரணமாக 2016இல் சூகி ஜப்பான் சென்றிருந்தபோது 'மனித உரிமை மீறலுக்கு பொறுப்பானவர்கள் யார் என்று முழுமையான ஆதாரம் கிட்டும் வரையில் யாரையும் குற்றம்சாட்டுவதில்லை என்பதில் கவனமாக இருக்கிறோம்' எனக் கூறியிருந்தார். (www.samooganeethi.org) கண்முன்னே நிகழுகின்ற மனித உரிமை மீறல்களை கண்டும் காணாமலும் போன்று அமைதி காத்து வருகின்றார் ஆங் சான் சூகி. இதனால் இன்று சர்வதேச அளவில் பல்வேறு எதிர்ப்புக்களுக்களை சந்தித்தார். குறிப்பாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகியின் பெயரினை அகற்றக்கோரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடலாயினர். மேலும் அவருக்கு வழங்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசினை மீண்டும் பெறுமாறு கண்டனங்கள் முன்வைக்கின்றது. கனேடிய அரசு அண்மையில் அவரது வதிவிட அந்தஸ்தினை நிராகரித்திருந்தது.

**பங்களாதேஷ் - மியன்மார் உடன்பாடு**

சீனா மியன்மாருக்கும் பங்களாதேஷிற்கும் இடையிலே பேச்சுவார்த்தை நடாத்தி மீண்டும் அகதிகளை மியன்மாருக்கு அனுப்புவது தொடர்பான உடன்படிக்கையொன்றினை மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனை வழங்கியிருந்தது. அகதிகளின் வருகையால் பங்களாதேஷ் பெரும் சமூக – பொருளாதார – சுற்றுப்புற சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடுவதாகக்கூறி அகதிகளை இனி அனுமதிபதில்லை எனவும், மீண்டும் அவர்களை மியன்மார் நோக்கி அனுப்ப போவதாகவும் முடிவெடுத்தது. அதேவேளை வங்கதேசத்தின் இந்திய உயர் ஆணையர் ஹர்ஷ்வர்தன் ஷிரிங்லா பங்களாதேஷ் நோக்கிய ரோஹிங்கிய அகதிகளின் வருகையானது ஒட்டுமொத்த பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் சவாலென தெரிவித்திருந்தார்.

இதன் பின்னணியில் பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கிய அகதிகளை மீண்டும் மியன்மார் நாட்டிற்கு அனுப்புவது தொடர்பான ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையேயும் கைச்சாத்திடப்பட்டது. அதன்படி 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ரோஹிங்கிய அகதிகளை திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அறிவித்திருந்தது. ஆனாலும் சீன அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட 'ராகைன் மாவட்டத்தில் ரோஹிங்கியர்கள் மீது நடவடிக்கை எடுக்கமாட்டோம்' என மியன்மார் அரசு வாக்குறுதி தர வேண்டுமென்ற கோரிக்கை இன்னமும் அவ்வரசினால் ஏற்கப்படவில்லை என்பது அவ்வரசின் போக்கினை தெள்ளத் தெளிவாக புலப்படுத்துகின்றது. இந்நிலையில் இம்முடிவிற்கு ரோஹிங்கிய அகதிகள் மறுப்புத் தெரிவித்திருந்தனர். வங்கதேசத்தில் சுமார் 6,45,000 ரோஹிங்கிய அகதிகள் வாழ்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் சூகி ரோஹிங்யர்களை பங்களாதேஷிலிருந்து அழைப்பது தொடர்பாக பின்வருமாறு கூறியிருந்தார். 'ரக்கினே மாநிலத்தில் ரோஹிங்கியர்களுக்கு எதிராக வன்முறைகள் நடந்ததா என்பது தொடர்பில் என்னால் கருத்துக்கூற இயலாது. ஆனால் இனி அவ்வாறு நடைபெறாது என்று தெரிவிக்க இயலும். ரோஹிங்கியர்களை மியன்மாருக்கு அமைப்பது தொடர்பில் பங்களாதேஷ் அரசுடன் பேச்சு நடைபெறுகின்றது. (உதயன்,23.11.2017) ரோஹிங்கிய அகதிகளை மீண்டும் மியன்மாருக்கு அனுப்புவது தொடர்பான விபரங்கள் தெளிவற்றவாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக சர்வதேச மன்னிப்பு சபை ரோஹிங்கிய அகதிகளைத் திருப்பியனுப்புவது முன்முதிர்ச்சியற்ற செயலெனக் கூறியது.

**மியன்மாருக்கு எதிரான சர்வதேச நடவடிக்கைகள்**

ரோஹிங்கியர்களுக்கெதிராக மியன்மார் அரசு மேற்கொண்டு வருகின்ற மனிதாபிமானமற்ற செயற்பாடுகளைக் கண்டித்து பல்வேறு நாடுகள் தமது கண்டனங்களையும் வெளிப்படுத்தியுள்ளன. மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் ரோஹிங்கியர்களின் படுகொலையைக் கண்டித்து 2016ஆம் ஆண்டு பிரதமர் நஜீப் ரசாக் தலைமையில் கண்டனப் பேரணி மேற்கொள்ளப்பட்டது. அத்தோடு மியன்மார் இனப்படுகொலை ஒன்றை நடத்தி வருகின்றதெனவும் மலேசிய அரசு குற்றஞ்சாட்டியது. அதேநேரம் மலேசியாவிலும்கூட 56,000 ரோஹிங்கிய முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் (Antonio Guterres) ரோஹிங்யர்களுக்கு எதிரான தாக்குதல்கள் 'இனச் சுத்திகரிப்புக்கான பாடப்புத்தகம் போன்று உள்ளது' எனக் கூறியிருந்தார். அத்தோடு மனித உரிமை கண்காணிப்பகத்தின் முன்னாள் இயக்குனர் டேவிட் மேத்திசன் செயற்கைக் கோளின் படங்களையும், அரசின் ஒப்புதல்களையும் அடிப்படையாகக் கொண்டு மியன்மாரில் மிகப் பெரிய மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என சுட்டிக்காட்டியுள்ளார்.(www.minnambalam.com) இவை அனைத்தும் வெறும் கண்டனங்களாக மட்டுமே காணப்படுகின்றனவேயொழிய எவ்விதமான பிரயோசனமும் இல்லை. இருப்பினும் தற்போதைய நிலையில் மியன்மார் நாட்டில் ஐக்கிய நாடுகள் சபை தலையீடு சற்று தீவிரமானதாக காணபட்டாலும்கூட அதனது வேகம் மந்தமாகவே உள்ளது. அத்தோடு ஐ.நா சபையின் பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தோஸ் மணிலாவில் நடைபெற்ற ஆசியன் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டபோது ஆங் சான் சூகியினைச் சந்தித்து மியன்மாரிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவதனை உறுதிப்படுத்துமாறு கேட்டிருந்தார்.

மியன்மாரினைத் தமது சந்தைகளாக வைத்திருப்பதற்கே மேற்கு நாடுகள் விரும்புகின்றன. ஆகையினால் அவை மியன்மாரில் மீறப்படுகின்ற மனித உரிமை மீறல்களைத் தட்டிக் கேட்பதில் தயக்கம் காட்டுகின்றன. அத்தோடு தாய்லாந்தில் ஒன்றுகூடிய 17 நாடுகளின் உச்சி மாநாட்டிலும் பெரும்பான்மையான நாடுகள் மியன்மாருக்கு எதிராகத் தமது கருத்துக்களை தெரிவித்திருந்தன. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்திருந்தார். அத்தோடு அமெரிக்காவும் மியன்மாரில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான நியாயமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வற்புறுத்தியது. அதேநேரத்தில் மியன்மார் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் ரோஹிங்கிய முஸ்லீம்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள், இராணுவம், ஆட்சியாளர் உள்ளிட்ட பலரையும் சந்தித்திருந்தார். இதன் பின்னர் ரெக்ஸ் டில்லர்சன் மியன்மார் மீது பொருளாதார தடைகளை விதிப்பற்கு இது தக்க நேரமில்லை என்ற அறிக்கையையும் வெளியிட்டிருந்தார்.

**முடிவுரை**

சுதந்திரம் பெற்றது முதலாக மியன்மார் அரசினால் ரோஹிங்கியர்கள் திட்டமிடப்பட்ட வகையில் பிரஜாவுரிமை அற்றவர்களாக அடையாளப்படுத்தப்பட்டு, அவர்களுக்கெதிராக வன்முறைகளும் கட்டவிழ்க்கப்பட்டன. உலக நாடுகளின் அமைதியினைக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட ஐ.நா

சபையினால்கூட இவ் அகதிகளுக்கு ஒரு தீர்வினை வழங்கமுடியவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமே. பிரஜாவுரிமை கோரி இன்று அகதிகளாக தம்மை உலக நாடுகளுக்கு அடையாளப்படுத்தி நிற்கின்ற துயரச் சம்பவத்தில் ரோஹிங்கியர்கள் சிக்குண்டுள்ளனர் என்றால் மிகையாது. மியன்மார் தேசத்தில் மட்டுமன்றி இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் சிறுபான்மையினமாக வாழ்ந்து வருகின்ற முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினைகளிலொன்று அடக்குமுறையென்பதே. முதலில் சர்வதேசங்கள் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் சிறுபான்மையினங்கள் தலைநிமிரலாம். மதங்கள் அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டும். ஆசிய நாடுகளுக்கே சாபக்கேடுகளாக விளங்குகின்ற மத அடிப்படையிலான அரசியல் ஒழிக்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் அடக்குமுறைகள் ஒழிய அன்பு பிறக்கும். அது மியன்மாருக்கும் பொருந்தும்.

**உசாத்துணை நூல்கள்**

**நூல்கள்**

01. அருந்தவராஜா,க.(2018), சமகால சர்வதேச அரசியல் வரலாறு, அஞ்சு வெளியீட்டகம், நல்லூர், யாழ்ப்பாணம்.
02. ராமச்சந்திரன்,கே,வி. (1960), பர்மா தொகுப்பு நூல், அருணோதயம் வெளியீடு, சென்னை.
03. Louis Allen. (1934), Burma - The largest war, 1941-1945, Phoenix giant.
04. Trager,N. (1966), Burma from Kingdom to Republic, Pall Mall Press, London.

***பத்திரிகைகள்***

உதயன், 23.11.2017, நியூ உதயன் பப்ளிகேஷன் லிமிடெட், யாழ்ப்பாணம்

**இணையம்**

05. www.wordpress.com
06. www.samooganeethi.org.
07. www.minnambalam.com.